

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சம்மட்டிபுரம் பெதன்யாபுரம் பகுதி சார்பில் மாவட்டக் கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர், தவமணி தலைமையில் நடைபெற்றதில் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு சிறப்புரையாற்றினார். உடன்மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன் மற்றும் சம்மட்டிபுரம் கணேசன், மதி வெங்கடேஷ், நாகநாதன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பகுதி கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா,கழக பவள விழாவை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் 25 வது வட்ட கழக செயலாளர் அருள் ஏற்பாட்டில் நெல்லை பகுதி வலம்புரி அம்மன் கோவில் அருகில் புதுப்பிக்கப்பட்ட கழக கொடியை நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் கழக மூத்த முன்னோடி தலைமை கழகப் பேச்சாளர் திராவிட மணி கழகக் கொடி ஏற்றினார்.பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.நிகழ்வில் சுப்பையா,அலிஃப் மீரான், வேங்கை வெங்கடேஷ்,ஸ்டார் முருகன்,ஷெட்டி,பெப்சி சரவணன்,பத்மா,ராஜேஸ்வரி, சத்யா ஆறுமுகம், நெல்லையப்பன்,வேலாயுதம், சுடலைக்கண்ணு,சங்கரநாரா யணன்,கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவசிலைக்கு கழக மூத்த முன்னோடி பத்தமடை பரமசிவம் தலைமையில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.நிகழ்வில் மேயர் ராமகிருஷ்ணன்,மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,மாநகர துணைச் செயலாளர் பிரபு பாண்டியன்,வட்டச் செயலாளர்கள் மாரிமுத்து, பாலகனேஷ்,மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், பேச்சியம்மாள்,கோகுல வாணி, டாக்டர் சங்கர்,சகாய ஜூலியட் மேரி,ராஜேஸ்வரி,தகவல் தொழில்நுட்பணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி பகுதி துணைச் செயலாளர்கள் சுபஹாணி,பாபு முத்தையா ஒன்றிய கவுன்சிலர் முபின் இஸ்மாயில்,மாநகரப் பிரதிநிதிகள் ஜாமியா ஆசிக்,காசி லெப்பை புகாரி,குண்டு பாண்டியன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லைபாளையங்கோட்டை தொகுதி 38வது வார்டு திருச்செந்தூர் சாலையில் வி.எம் சத்திரம்,ஆரோக்கியநாதபுரம், ஆகிய 2 இடங்களில் பாளையங்கோட்டை தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூபாய் 26 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையை மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பயணிகள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்.உடன் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாமன்ற உறுப்பினர்கள் பாலம்மாள் முத்து,மன்சூர்,மாரியப்பன், மாவட்ட பிரதி வல்லநாடு முத்து, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆவின் கல்யாணசுந்தரம்,பால மகேஷ், துணை பாண்டியன்,நெல்லை பேட்டை பகுதி துணை செயலாளர் சுபஹாணி,தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி உள்பட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் சாத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினை திருமதிதமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஆறு.செல்வராசன்,வே.தமிழ்மாறன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



நாகர்கோவில் மாநகர சுற்றுச்சூழல் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு மாநகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜன் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கலைஞரின் சாதனை குறித்து பேசிய மாணவிக்கு ரொக்கப் பரிசும் நினைவு பரிசையும் மேயர் வழங்கினார் உடன் மாநகர செயலாளர். ஆனந்த்,பகுதி செயலாளர் .சேக்மீரான், மாமன்ற உறுப்பினர் .அமல செல்வன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் .முகமது பஷீர்,வட்ட பிரதிநிதி வினித் மற்றும் சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. கே.கே. நகர் அண்ணா நகர் கே புதூர் பகுதி சார்பில் மாவட்டக் கழக செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ.அறிவுறுத்தலின்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர்கள், செல்லூர் அறிவு நிதி, புண்ணியமூர்த்தி, சித்திக் ஆகியோர் தலைமையில் நடைபெற்றதில் மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம் பெ. குழந்தைவேலு, மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், முருகவேல், இளைஞரணி சௌந்தர்ராஜன், மாணவரணி அன்பு மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பகுதி கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ் ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., பெரியகுளத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தார் உடன் நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னாடி கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு சுரண்டை நகரில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் முன்னிலையில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் சுப்பிரமணியன் பூல்பாண்டியன், கோமதிநாயகம்,ராஜன்,முத்து சுப்பிரமணியன்,அஜய், பிரேம்குமார் உட்பட கழகத்தினர் பலர் கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையத்தில் அவரது முழு உருவ வெண்கலைச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பவானி ராஜேந்திரன், நகர் மன்ற தலைவர் கார்மேகம், பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, இராமநாதபுரம் நகர்மன்ற துணைத் தலைவர் பிரவீன் தங்கம் செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, விவசாய அணி மாநில துணைச் செயலாளர் குணசேகர், மாநில மாவட்ட நகர ஒன்றிய கிளைக் கழக தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை நகரில் நகராட்சி சார்பில் ரூபாய் 3 கோடியே 69 லட்சத்தில் கட்டப்பட்ட புதிய வார சந்தையினை நகர் மன்ற தலைவர்சி.எம். துரை.ஆனந்த் திறந்து வைத்தார். உடன் நகராட்சி அலுவலக மேலாளர் கென்னடி மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அலுவலர்கள் உள்ளார்கள்.



மதுரை மாநகர் மாவட்டம், 58 ஆவது வட்டத்தை சேர்ந்த திராவிடர் படிப்பகத்தில், 75 ஆவது ஆண்டு பவள விழாவும் , பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு, அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து கழக கொடியினை ஏற்றி இனிப்பு வழங்கும் விழாவிற்கு 58 ஆவது வட்ட கழக செயலாளர் சீனி ரமேஷ் தலைமையில் ஆரப்பாளையம் 1 ஆம் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ். மாறன் முன்னிலையில் கழக பொதுக்குழு உறுப்பினர் எம். பிரமநாயகம் என்ற பரமன் இனிப்பு வழங்கினார். மாவட்ட பிரதிநிதி பாண்டி, திராவிட படிப்பகத்தை சேர்ந்த ஜெகநாதன், ராமசாமி, ரிஷி, BSNL சந்திரசேகர் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.